# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்
## ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG
## ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, LØRENSKOG

### பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 41-2022*

அனைவரும் இலையுதிர்கால விடுமுறையில் சிறப்பாகக் களித்திருப்பீர்கள் என நம்புகின்றோம்.

கடந்த 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை தமிழர் வள ஆலோசனை மையத்தில் நடைபெற்ற அறிவாடல் நாடளாவிய போட்டியில் பங்குகொண்ட எமது வளாகத்தைச்சேர்ந்த அனைத்து மாணவர்களுக்கும் எமது பாராட்டுகளைத் தெரிவிப்பதோடு இப்போட்டியில் பங்கேற்று உலகளாவிய போட்டிக்கு எமது வளாகத்திலிருந்து தெரிவான மாணவர்களின் விபரத்தினையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

**அறிவாடல் உலகளாவிய போட்டியில் தெரிவான எமது வளாகத்தைச் சேர்ந்த மாணவர்களின் விபரம்**

4ஆம் வகுப்பிலிருந்து ***சந்தோஷ் கஜேந்திரன்***
5ஆம் வகுப்பிலிருந்து ***ஜொனாத்தன் பிறேம்குமார்*** மற்றும் ***ஜெய தோஷிகா நந்தகுமார்*** மற்றும்
6ஆம் வகுப்பிலிருந்து ***கார்த்திகா செல்வம்*** ஆகியோர் ஆவர்.
இவர்கள் அனைத்துலக அறிவாடல் போட்டியிலும் வெற்றிபெற முன் கூட்டிய எமது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கல்வி - கலை**

15.10.2022 சனிக்கிழமை வழமைபோல் வழங்கப்பட்ட நேரத்தில் நடைபெறும். 3வயது மாணவர்களை எமது வளாகத்தின் தொடக்கநிலையில் இணைப்பது பற்றிய விபரம் விரைவில் அறியத்தரப்படும்.

*அனைத்துலக ஆண்டிறுதித் தேர்விற்கான பெறுபேறுகள் அனைத்தும் எமது மாணவர்களின் இணையவழியினூடாக தனித்தனியே அநுப்பிவைக்கப்பட்டுள்ளது. கிடைக்கப்பெறாதவர்கள் எமக்கு அறியத்தரவும்.*

***மாணவர்கள் வெளியில் பயன்படுத்தும் காலணிகளைக் கழற்றி கட்டிடத்தினுள் பயன்படுத்தக்கூடிய காலணிகளையும் கொண்டுவருதல் மிக முக்கியம்.***

**சிற்றுண்டிச்சாலை**

இவ்வாரம் வழமைபோல் இயங்குநிலையில் இருக்கும்.

## நிதி

கடந்தவாரம் கட்டணம் சார்பான நினைவூட்டும் தகவல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கட்டணம் செலுத்திய சிலருக்கும் இத்தகவல் கிடைக்கப்பட்டுள்ளது. எனவே கட்டணம் செலுத்தியவர்கள் அத்தகவலை நீக்கிவிடவும். **கடந்த பெற்றோர் சந்திப்பில் முடிவெடுத்தது போல் இன்னும் கட்டணம் செலுத்தாதவர்கலுக்கான கட்டணவிபரம் பிள்ளைகளின் புத்தகப் பைகளினூடாக விரைவில் அனுப்பிவைக்கப்படும்.** கட்டணம் செலுத்தியதில்/ செலுத்தவேண்டியதில் ஐயப்பாடு இருப்பின் எமது நிதிப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

## ஆண்டு விழா - 28.01.2023

அன்னை லோறன்ஸ்கூக் வளாகத்தின் 20வது ஆண்டுவிழாவிற்கான ஏற்பாடுகள் மற்றும் திட்டமிடல் தொடங்கவுள்ளோம். எம்மோடு இணைந்து செயற்பட பலர் தொடர்புகொண்டுள்ளீர்கள். மகிழ்ச்சி.. தொடர்ந்தும் இணைந்து பணியாற்ற விரும்புபவர்கள் எம்மோடு 91875537 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

*எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.*

<u>நன்றி!</u>

<u>நிர்வாகம்</u>
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப்
பணிபுரிவோம்!